# ජාතික ධීවර හා ජලජීවී වගා ප්‍රතිපත්තිය

## தேசிய கடற்றொழில் மற்றும் நீரியல்வளர்ப்புக் கொள்கை

## NATIONAL FISHERIES AND AQUACULTURE POLICY

**ධීවර සහ ජලජ සම්පත් සංවර්ධන අමාත්‍යාංශය**

**கடற்றொழில் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு**

**Ministry of Fisheries and Aquatic Resources Development**

**2018**

## கடற்றொழில் மற்றும் நீரியல் வளர்ப்பிக்கான தேசியக்கொள்கை.

1. **அறிமுகம்**.

மீன் மற்றும் கடற்றொழில் உற்பத்தி பொருட்களுக்கு உள்ளூரிலும் சர்வதேச சந்தையிலும் உள்ள அதிகரித்த கேள்வி, கடலோர நாடுகளுக்கு தமது தேசிய பொருளாதாரத்தில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளர்ப்பின் பங்களிப்பை அதிகரிக்கக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த வாயப்பின் முழுப் பலனை அடைவதற்கும் அதனைத் தொடர்ந்து நிலை நிறுத்தவதற்கும், அடிப்படை வளத்தை அளவிற்கு மீறி பயன்படுத்துவதால் கடற்றொழில் மற்றும் நீரியல்வளர்ப்பின் மூலமான உற்பத்தியை உகந்த மட்டத்திற்கு உயர்த்த வேண்டும். இதற்கு இலங்கையில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளர்ப்பு அபிவிருத்திக்கு புதிய முதலீடுகள் உள்வாங்கப்படவேண்டும். இத்துறையில் உள்ளூர் மற்றும் பிறநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதற்கான நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக அமைவது இலங்கையின் பொது பொருளாதார சமூக அபிவிருத்திக் கொள்கைகளிற்கு இணக்கமான தேசிய கடற்றொழில் மற்றும் நீரியல்வளர்ப்பு கொள்கை ஆகும். மேலும் இத்துறையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி முயற்சிகளும் பரிபாலன நடவடிக்கைகளும் பிராந்திய மற்றும் சர்வதேச கடற்றொழில் வளங்களின் பாதுகாப்பு மற்றும் பரிபாலன சட்டவரையறைகளுக்கு உட்பட்டதாக அமைய வேண்டும்.

இதனடிப்படையில் கடற்றொழில் நீரியல்வளங்கள் அபிவிருத்தி அமைச்சு தனது கீழ் உள்ள திணைக்களங்களுடனும் நிறுவனங்களுடனும் இணைந்து இங்கு முன்மொழியப்பட்ட தேசிய கடற்றொழில் மற்றும் நீரியல் வளர்ப்புக் கொள்கையை, ஒரு நீண்ட பங்குதாரர்களினூடான ஆலோசனைக் கலந்துரையாடல் ஊடாக வரைந்திருக்கின்றது. நோர்வே நாட்டின் வர்த்தகம், தொழிற்துறை மற்றும் கடற்றொழில் அமைச்சின் கீழான கடற்றொழில் மற்றும் நீரியல் வளர்ப்புத் திணைக்களம் இரு நாட்டுக் கூட்டுறவு உடன்படிக்கைக்கு அமைவாக இக் கொள்கையை உருவாக்குவதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்கியது.

2. **கடற்றொழில் நீரியல் வளர்ப்புத்துறை**

மீன்பிடி 2000 ஆண்டு பழமை வாய்ந்த பாரம்பரியத்தை இலங்கையில் கொண்டிருக்கிறது. கடலோர சமூகத்தின் முதன்மையான பொருளாதார நடவடிக்கையாக இது அமைகின்றது. இலங்கை 1948ம் ஆண்டு பிரித்தானியாவின் ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்ற பின், அதுவரை ஒரு வாழ்வாதார நடவடிக்கையாக இருந்த கடற்றொழில் படிப்படியாக விருத்தியடைந்தது. இன்று பல மில்லியன் ரூபா பெறுமதிமிக்க தொழிற்துறையாக மாறி இருக்கின்றது. நன்னீர் மீன்பிடியும் நீரியல் வளர்ப்பும் 75 ஆண்டுகளைவிட குறைந்த அண்மைக்கால அபவிருத்திகளாகும். வடமேற் பிராந்தியத்தில் கடற்கரையோர நீரியல் வளர்ப்பு 1980களில் இறால் வளர்ப்புடன் ஆரம்பமாகியது. கடல்நீர் நீரியல் வளர்ப்பு மிக பிந்திய காலப்பகுதியில் 2010ம் ஆண்டளவில் ஆரம்பமாகியது.

இலங்கையின் மீன் வளத்தின் அடிப்படையாக 517,000 சதுர கி.மீ பிரத்தியேக பொருளாதார வலயம், 21,500 சதுர கி.மீ. கடல்நீர் ஏரி, மற்றும் கழிமுகம் உள்ளடங்கிய உள்நாட்டு நீர்த்நிலைகள் 5,200 ச.கி.மீ மனிதனால் உருவாக்கப்பட்ட நீர்த்தேக்கங்கள் என்பவற்றை கொண்டுள்ளது. நீரியல் வளர்ப்பிற்கு ஆதாரமாக குடாக்கடல், கடல் நீர் ஏரி, நீர்த்தேக்கங்கள் மற்றும் கடற்கரையோர மற்றும் நீர்த்தேக்கங்கட்கு அண்மித்த நிலப்பரப்புகள் அமைகின்றன.

மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு, தற்கால சந்தை விலைப்படி 1.4% பங்களிப்பை இத்துறை அளிக்கின்றது. அண்ணளவாக 575,000 (நாட்டின் மொத்த தொழிலாளர் வளத்தின் 3.7%) பேருக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொழில்வாய்ப்பை அளிக்கின்றது. ஆண்டின் மொத்த மீன் உற்பத்தி 500,000 தொனனிற்கு அதிகம் ஆகும். மேலும் பெறுமதிச் சேர்க்கை USD 1300 மில்லியன் இற்கு அதிகம் ஆகும். மொத்த உற்பத்தியில் 5% ஏற்றுமதி செய்யப்படுவதன் மூலம் USD 250 மில்லியனுக்கு அதிகமான வருவாய் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. பிரதானமாக ஏற்றுமதிக்கான மீன் இனங்களாக உருளை மீன், இறால், சிங்கஇறால், நண்டு, கடலட்டை அழகிற்கான வளர்ப்பு மீன் போன்றவை அமைகின்றன. மக்களின் பிரதான விலங்குப் புரத உணவாக மீன் இருக்கிறது. தற்பொழுது 65% உள்நாட்டுத் தேவைக்கான மீன் உள்ளூர் உற்பத்தியில் இருந்து பெறப்படுகின்றது. மிகுதி இறக்குமதி செய்யப்படுகின்றது. அரசு மொத்த உள்நாட்டு தேவையையும் உள்ளூர் கடற்றொழில், நீரியல் வளர்ப்பு உற்பத்தியில் இருந்து பெற முயல்கிறது. அல்லது மாற்றீடாக மீன் ஏற்றுமதியின் மூலம் பெறப்படும் ஆதாயத்தை மீன் இறக்குமதிக்கான செலவுடன் ஈடுகட்ட முயற்சிக்கின்றது.

### 3. இத்துறையின் அபிவிருத்திக்கான குறிக்கோள்கள்.

கடற்றொழில் நீரியல் வளர்ப்புக் கொள்கையினை அமுல்படுத்துவதன் மூலம் பின்வரும் குறிக்கோள்களை அடைய அரசு விழைகின்றது.

1) அறிவியல் தகவல்களின் அடிப்படையிலான நிலைபேறான, வள முகாமைத்தவம்.
2) பிராந்திய மற்றும் சர்வதேச கடற்பாடுகளுக்கு கட்டுப்படுத்தல்
3) அதிகரித்த கடல் மீன் உற்பத்தி
4) அதிகரித்த நீரியல் வளர்ப்பு மற்றும் நன்னீர் மீன் உற்பத்தி
5) மீன் பிடிக்கப்பட்டதிற்கு பின்பான அதன் தர இழப்பைக் குறைத்தலும் அதிகரித்த பெறுமதி சேர்ப்பும்.
6) தனிமனித மீன் உணவு உட்கொள்ளும் அளவை அதிகரித்தல்.
7) அதிகரித்த அந்நியச் செலவாணி ஈட்டுதல்.
8) பொழுது போக்கு, தொழில்வாய்ப்பு, உற்பத்தித்துறைக்கான வாய்ப்புக்களை அதிகரித்தல்.
9) மீனவ சமுதாயத்தின் சமூக பொருளாதார தரத்தை அதிகரித்தல்.

## 4. கொள்கைகள்.

இக் கொள்கைகள் ஐந்து பிரிவின் கீழ் தரப்பட்டுள்ளன. அவையாவன. கடல்சார் மீன்பிடி, நீரியல் வளர்ப்பும் நன்னீர் மீன்பிடியும், நுகர்வோர் சந்தையும், நீலப் பொருளாதாரமும் மற்றும் பிற இக் குறிக்கோள்களை அடைவதற்காக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய செயற்பாடுகளையும் 2018-2025 காலப்பகுதியில் செய்யப்பட வேண்டிய முதலீடுகளையும் உள்ளடக்கி ஒவ்வொரு கொள்கையையும் செயற்படத்துவதற்கான பிரதான திட்ட வரைபு ஒன்று தயாரிக்கப்படும்.

### 4.1 கடல்சார் மீன்பிடி

இலங்கையின் தற்கால தேசிய மீன் உற்பத்தி அண்ணளவாக 530,000 தொன்களாகும். இதில் 450,000 தொன் (85%) நாட்டுடமை கடல்வலயம், பிரத்தியேக பொருளாதார வலயம், ஆழ்கடல் போன்ற கடல்சார் மீன்பிடி மூலம் பெறப்படுகின்றது. நிலைபேறு மட்டதிற்குட்பட்டு மீன் உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும். இதற்கு கடற்றொழில் கலங்களின் அதிகரிப்பு, மேம்படுத்தப்பட வள்ளங்கள் முகாமைத்துவம் போன்ற செயற்பாடுகளை கட்டுப்பாட்டுடன் நடைமுறைப்படுத்துவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். கடல்சார் மீன்பிடித் தொழிலுக்கான கொள்கைகள் பின்வருமாறு.

**<u>நிலைபேறான வள முகாமைத்துவம்.</u>**

**அரசாங்கம்:**

4.1.1 கிடைக்கப்பெறும் சமூக, பொருளாதார மற்றும் சூழலியல் விஞ்ஞான சான்றுகளின் அடிப்படையில் கடல்சார் உயிரியல் வளங்களின் நிலைபேறான முகாமைத்துவத்தை உறுதிப்படுத்தல்.

4.1.2 பொறுப்புடனான கடற்றொழில் முகாமைத்துவத்தை ஊக்குவிப்பதற்கு சூழற்தொகுதி மற்றும் முன்னெச்சரிக்கை அணுகுமுறைகளை செயற்படுத்தவும்.

4.1.3 அழிவை எதிர் நோக்குகின்ற, அருகி வருகின்ற, பாதுகாக்கப்பட்ட இனங்களின் இருப்பை மேம்படுத்தல்.

4.1.4 நாட்டுடமைக் கடல் வலயத்திலும், பிரத்தியேக பொருளாதார வலயத்திலும் வாழ்விட முகாமைத்துவம் மற்றும் வளர்ப்பு முறைகள் மூலம் மீன் இருப்பை மேம்படுத்தல்.

4.1.5 கடற்றொழில் கலங்களின் மிதமிஞ்சிய அதிகரிப்பைத் தடுத்தல்.

4.1.6 அளவிற்கு மீறிய மீன்பிடிக்கு உட்பட்ட கடற்பிரதேசங்களிலான கடற்றொழிலை, அளவிற்கு குறைவாக அல்லது மீன்பிடிப்பதற்கு உட்படுத்தப்படாத கடற்பிரதேசங்கட்கு திசை திருப்புதல்.

4.1.7 ஒப்பீட்டளவில் சூழலுக்கு குறைந்தளவு பாதிப்பு தரக்கூடிய கடற்றொழில் முறைமைகளையும் உபகரணங்களையும் ஊக்குவித்தல்.

4.1.8 இலங்கையின் ஆளுகைக்கு உட்பட்ட கடலில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகளுக்கு அந்நிய நாட்டுக் கப்பல்களுக்கு இருக்கும் தடையை தொடர்ந்து பேணவும்.

4.1.9 கடற்றொழில் முகாமைத்துவம் சம்பந்தமாக சர்வதேச உடன்படிக்கைகளில் வரையறுக்கப்பட்ட தேவைகட்கு ஏற்ப பொறுப்பான கடற்றொழிலை ஊக்குவித்தல்.

4.1.10 ஆழ்கடல் மீன்பிடிக்கு புதிய கப்பல்களுக்கு அனுமதி வழங்கும் போது நவீன மீன் கண்டறிகருவி, கப்பலில் மீன்தரம் பேணக்கூடிய மற்றும் பிற வசதிகளைக் கொண்ட கடற்கலங்களுக்கு மட்டுப்படுத்தல்.

<u>**ஆளுகையை உறுதிப்படத்தல்**</u>

**அரசாங்கம்:**

4.1.11 பிரத்தியேக கடல் வலயத்தில் இருப்பிலுள்ள மீன் வளத்தை பிடிப்பதற்கு குடிரிமை வரி அறவிட்டு அதனை கடற்றொழில் அபிவிருத்திக்கும் முகாமைத்துவத்திற்கும் பயன்படுத்தவும்

4.1.12 ஆழ்கடலில் கட்ற்றொழிலில் ஈடுபடும் கடற்கலங்களுக்கு மீன்பிடி அளவுகளை ஒதுக்கீடு செய்வதற்கு வரி அறவிட்டு அதனைக் கடற்றொழில் அபிவிருத்திக்கும் முகாமைத்துவத்திற்கும் பயன்படுத்தவும்.

4.1.13 திட்டமிடல், முகாமைத்துவம் மற்றும் அறிக்கைப்படுத்தலுக்கு தகவல் முகாமைத்துவச் முறையையை பயன்படுத்தவும்.

4.1.14 முகாமைத்துவச் செயன்முறைகளையும் கூட்டு ஆளுகையையும் உறுதிப்படுத்தல்.

4.1.15 கால, நேர இட வேறுபாடான திட்டமிடலை செயற்படுத்தல்.

4.1.16 தேவையான ஆளணிகளை விருத்தி செய்தல்.

<u>**மீன் உற்பத்தியை அதிகரித்தல்**</u>

**அரசாங்கம்:**

4.1.17 மீன்பிடித் தளங்களை மீனவர்கள் அறிந்து கொள்ளும் முகமாக கடற்றொழில் தள எதிர்வுகூறல் செயன்முறையை உறுதிப்படுத்தல்.

4.1.18 பிரத்தியேக பொருளாதார வலயத்தினுள் மீன்பிடிக்கு உட்படுத்தப்படாத அல்லது குறைந்தளவு மீன்பிடிக்கு உட்படுத்தப்படும் மீன் வளங்களை மீன்பிடிக்கு உட்படுத்தப்படுவதை ஊக்குவித்தல்.

4.1.19 உயிர்ப்பான தூண்டில் இரை உட்பட தூண்டில் இரையாக உள்ளூர் உற்பத்திகளைப் பாவிப்பதை ஊக்குவித்தல்.

4.1.20 சர்வதேச உடன்படிக்கைகளுக்கு இணைவாக அந்நிய நாட்டு மீன்பிடிக் கலங்களிலிருந்து பொறுப்பான முறையில் மீன் இறக்கலை ஊக்குவித்தல்.

**பிராந்திய மற்றும் சர்வதேச உடன்படிக்கைகளுக்கு இணங்குதல்.**

**அரசாங்கம்:**

4.1.21 பிராந்திய மற்றும் சர்வதேச கடற்றொழில் முகாமைத்துவ ஒன்றுகூடல்களில் பங்கு பற்றுதல்.

4.1.22 சர்வதேச உடன்படிக்கை மற்றும் பிராந்திய கடற்றொழில் முகாமைத்தவ நிறுவனங்களினால் (RFMOs) வரையறுக்கப்பட்ட கடற்றொழில் முகாமைத்துவ செயற்பாடுகளுக்கு கட்டுப்படுதல்.

4.1.23 அதிகளவிலான இடம் பெயரும் மற்றும் குறிப்பிட்ட சூழல் தொகுதியில் வாழும் மீன் இனங்களின் இருப்பையும் முகாமைத்துவத்தையும் உறுதிப்படுத்துவதற்கு அண்டை நாடுகளுடன் நேரடியாகவும் பிராந்திய கடற்றொழில் முகாமைத்தவ கூட்டமைப்பினூடகவும் இணைந்து செயற்படல்.

4.1.24 மீன் வளங்களை முகாமைத்துவம் செய்வதற்கும் அவற்றின் இருப்பை உறுதி செய்வதற்கும் உலக விவசாய நிறுவனத்துடன் இணைந்து செயற்படல்.

4.1.25 கடற்றொழிலாளர் சார்பாக சர்வதேச தொழிலாளர் சட்டம் மற்றும் சர்வதேச கடல்சார் சட்டம் என்பனவற்றில் வரையறுக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு இணங்க செயற்படல்.

4.1.26 சர்வதேச சட்டத்திற்கு இணங்க அபாயத்தில் இருக்கும் அந்நிய மீன்பிடி கலங்களுக்கு இறங்குதுறை வசதியை பெற்றுக் கொடுத்தல்.

**உட்கட்டைப்பு வசதிகள்**

**அரசாங்கம்:**

4.1.27 பிரதான மீன்பிடித் துறைமுகங்களை இலங்கை கடற்றொழில் துறைமுக கூட்டுத்ததாபனதிதினூடாக கட்டமைத்தலும் இயக்குதலும்.

4.1.28 மீன்பிடித் துறைமுகங்களை ‘‘பச்சை மீன்பிடித் துறைமுகம்’’ என்ற கருத்தாக்கத்தின் கீழும் பல்தேவை மீன்பிடி துறைமுகமாகவும் இயங்குதலை ஊக்குவித்தல்.

4.1.29 மற்றைய உட்கட்டமைப்பு வசதிகளை தனியார் நிறுவனங்களால் கட்டமைப்பதற்கும் இயக்குவதற்கும் ஊக்குவித்தல்.

4.1.30 நங்கூரத் துறைகளையும் சிறிய மீன் இறங்குதுறைகளையும் விருத்தி செய்து அவற்றின் இயக்கத்திற்கும் பரிபாலனத்திற்குமான பொறுப்பை மீனவ சமுதாயத்திடம் கையளித்தல்.

**கடற்றொழில் கலங்கள்**

**அரசாங்கம்:**

4.1.31 மீன்பிடிக்கலங்களின் மிதமிஞ்சிய அதிகரிப்பைப் கட்டுப்படுத்தல்

4.1.32 மீன்பிடிக்கலங்களின் தர நிர்ணயத்தை உறுதிப்படுத்தல்.

**<u>கடற்பயண பாதுகாப்பும் தொழில்சார் பாதுகாப்பும்.</u>**

**அரசாங்கம்:**

4.1.33 சர்வதேச தர கட்டுப்பாட்டிற்கு இணங்க கடலிலும் நிலத்திலும் பாதுகாப்பையும் ஆரோக்கியத்தையும் ஏற்புடைய வேலைத்தள தரத்தை உறுதி செய்தல்.

4.1.34 கடலில் பாதுகாப்பையும் தொழிற்துறை சார் பாதுகாப்பையும் கவனத்திற் கொண்டு காப்பீட்டுத் திட்டங்களை உருவாக்குதலை ஊக்குவித்தல்.

4.2 நீரியல் வளர்ப்பும் உள்நாட்டு நீர்நிலைகளிலான மீன்பிடியும் இலங்கையில் கடல்நீர்ஏரி, கழிமுகம், நிலையான மற்றும் பருவகால நீர்த்தேக்கங்கள், வில்லுக்கள் (வெள்ள ஏரிகள்) போன்ற பெருமளவான உள்நாட்டு நீர்நிலைகளை மேற்கொள்ளப்படுகின்றது. ஆகவே மேலும் அபிவிருத்தி செய்யக்கூடிய நீரியல் வளர்ப்பையும், உள்நாட்டு நீர்நிலைகளிலான மீன்பிடியை அதிகரிக்கக்கூடிய வாய்ப்புக்களையும் கொண்டுள்ளது. இலங்கையின் தற்போதைய நீரியல் வளர்ப்பின் மற்றும் உள்நாட்டு நீர் நிலைகளிலிருந்துமான ஆண்டு மீன் உற்பத்தி 75,000 தொன்களாகும். இவ் உற்பத்தியை நிலைபேறான ரீதியில் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புகள் உண்டு. நீரியல் வளர்ப்பிற்கு நீரும், நிலமும் அத்தியவசியமாகின்றது. இவ் வளங்கள் பிற பல அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவும் தேவைப்படுகின்றது. இதனால் நீரியல் வள மீன்பிடி அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றயை பிற நல பயன்பாடுகளுடன் பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றது. நீரியல் வளர்ப்பு, சூழல் மீது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. ஆகவே நீரியல் வளர்ப்பை மேற்கொள்வதற்கு முன்னர் இட ஒதுக்கீட்டிற்கான திட்டம் மற்றும் சமூக பொருளாதார மற்றும் காலாச்சார தாக்க மதிப்பீடு செய்யப்பட வேண்டும். நீரியல் வளர்ப்பு மற்றும் உள்நாட்டு நீர்நிலைகளிலான மீன்பிடி பற்றிய வழிகாட்டலும் கொள்கைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

**<u>வளங்களின் நிலைபேறான முகாமைத்தவம்.</u>**

**அரசாங்கம்:**

4.2.1 உள்நாட்டு மீன்பிடிமுகாமைத்துவத்திற்கு சூழற்தொகுதி அணுகுமுறையை செயற்படுத்தல்.

4.2.2 உள்நாட்டு நீர்நிலைகளில் உயிரியல் பலவகைத் தன்மை பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தல்.

4.2.3 கடல்நீர் ஏரிகளிலும் கழிமுகங்களிலும் மீன்பிடியில் ஈடுபடும் மீன்பிடிக்கலங்களின் நீளத்தையும் இயந்திரங்களின் வலுவையும் ஒழுங்கமைத்தல்.

4.2.4 நீர்த்தேக்கங்களில் இயந்திரப்படகுகளை மீன்பிடிப்பதற்கு அனுமதிக்காமை.

4.2.5 நீரியல் வளர்ப்பு அபிவிருத்திக்கு கால இடவேறுபாடான திட்டங்களை செயற்படுத்தல்.

4.2.6 சூழல், சமூக பொருளாதார கலாச்சார தாக்க மதிப்பீட்டின் அடிப்படையில் நில மற்றும் நீர் வளங்களை ஒதுக்கீடு செய்யதல்.

4.2.7 அநுமதி அளிக்கப்பட்ட போது குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவதை உறுதிப்படுத்தவும்.

4.2.8 நீரியல் வளர்ப்பு விலங்கு ஆரோக்கிய நடவடிக்கைகளை உறுதிப்படுத்தவும்.

4.2.9 நீரியல் வளர்ப்பில் மிக உயர்ந்த முகாமைத்துவ நடைமுறைகளை ( BMPs ) ஊக்குவிக்கவும்

<u>**ஆளுகையை உறுதிப்படுத்தல்**</u>

**அரசாங்கம்:**

4.2.10 திட்டமிடல் முகாமைத்துவம் மற்றும் அறிக்கைப்படுத்தலுக்கு தகவல் முகாமைத்துவ முறையை பிரயோகித்தல்.

4.2.11 கூட்டு ஆளுகை மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளை உறுதிப்டுத்தல்.

4.2.12 ஆளுகைக்கு தேவையான மனித வளங்களை விருத்தி செய்தல்.

4.2.13 உள்நாட்டு நீர்நிலைகளிலான மீன்பிடி மூலம் ஈட்டப்படும் வருவாயில் ஒருபகுதியை அந்த நீர்நிலையின் தொடர்பேணல் முகாமைத்துவத்திற்கு பயன்படுத்தவும்.

<u>**மீன் உற்பத்தியை அதிகரித்தல்**</u>

**அரசாங்கம்:**

4.2.14 பொருத்தமான உள்நாட்டு நீர்நிலைகளில் மீன்பிடியையும், நீரியல் வளர்ப்பையும் விருத்தி செய்தல்.

4.2.15 உள்நாட்டு நீர் நிலைகளில் குறைந்தளவில் மீன்பிடிக்கு உட்படுத்தும், மீன்பிடிக்கு உட்படுத்தப்படாத மீன் வளங்களின் மீன்பிடியை ஊக்குவிக்கவும்.

4.2.16 சூழலுக்கு பாதகமற்ற நீரியல் வளரப்பை அதிகரிப்பதும் விஸ்தரிப்பதும்.

4.2.17 புதிய, நாட்டிற்குரித்தான மற்றும் மிகவும் விரும்பப்படுகின்ற நீரியல் வளர்ப்பு இனங்களை அறிமுகப்படுத்தும் பொழுது உலக விவசாய நிறுவன (FAO) செயன்முறை குறியீட்டிற்கு இணங்க செயற்படவும்.

4.2.18 நீரியல் வளர்ப்பிக்கான இனங்களை பரம்பரை அலகுத் தொழிநுட்படம் கொண்டு தரமேம்பாடு செய்யும் போது முன்னெச்சரிக்கைக் கொள்கையைக் கைக்கொள்ளவும்.

## 4.3 **நுகர்வோரும் சந்தைப்படுத்தலும்**

உலகளாவிய ரீதியில் கடற்றொழில் மற்றும் நீரியல் வள உற்பத்தியின் செய்வதன் அடிப்படை நோக்கம் மனித உணவுத்தேவையே. மீன் விலங்குப்புரதமாக மட்டுமன்றி ஆரோக்கியத்திற்கு தேவையான விட்டமின், கனிப்பொருட்கள் மற்றும் நுண் உயிர்ச்சத்துக்களான கல்சியம்,

அயடின், இரும்பு, நாகம் மற்றும் செலேனியத்தைக் கொண்டிருக்கின்றது. நல்ல ஊட்டச்சத்துக்களுடைய உணவு தனிமனித உடல் உள வளர்ச்சிக்கு காரணமாவதால் இது பெரும் பொருளாதாரத்திற்கும் சமூகவளர்ச்சிக்கும் ஆதாரமாக அமைகின்றது. மேலும் ஊட்டச்சத்து வழங்கியாக இருப்பதோடு மட்டுமன்றி கடற்றொழிலும் நீரியல் வளர்ப்பும் வருவாய் ஈட்டித்தருவதாகவும், வாழ்வாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பாகவும் அமைகின்றது. உணவு விவசாயநிறுவனத்தின் (FAO) நியதிப்படி உணவுப் பாதுகாப்பு என்பது அனைத்து மக்களுக்கும் எல்லா நேரங்களிலும் போதியளவு கிடைக்கப் பெறக்கூடியதாகவும், பெற்றுக்கொள்வதற்கான பொருளாதார வசதி கொண்டதாகவும் அவர்களுடைய போசாக்குத் தேவையையும் விருப்பு உணவையும் பூர்த்தி செய்யக்கூடியதாகவும் ஆரோக்கியமானதாகவும் இருத்தல் வேண்டும். உற்பத்தி செய்யப்படுகின்ற மற்றும் சந்தைப்படுத்தப்படுகின்ற மீன் நல்ல உணவுப் பாதுகாப்புடையதாகவும் வரையறுக்கப்பட்ட தரம் கொண்டதாகவும் மீன்பிடிக்கு பின்பான குறைந்த தரக்குறைவு கொண்டதாகவும் அல்லது தரக்குறைவு ஏற்படாததாகவும் கூடிய சந்தைப் பெறுமானம் கொண்டதாகவும் இருக்க வேண்டும். நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் அனைத்து பொருளாதார மட்டத்தில் வாழ்பவர்கட்கும், அவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய விலையில் மீன் இருத்தல் வேண்டும். விநியோகித்தல், சந்தைப்படுத்தல் மற்றும் ஏற்றுமதிக்கான வழிகாட்டிக் கொள்கைகள் கீழே தரப்படுகின்றன.

**உணவுப் பாதுகாப்பும் ஊட்டச் சத்தும்**

**4.3 அரசாங்கம்:**

4.3.1 அதிகளவிலான மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான போதிய வருமானம் ஈட்டக்கூடிய தொழில் வாய்ப்புக்களை இத்துறையில் உருவாககுதல்.

4.3.2 உள்ளூர்ரில் சந்தைப்படுதும் மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்களின் தரத்தையும் உணவுப் பாதுகாப்பையம் உறுதிப்படுத்தல்.

4.3.3 ஊட்டச்சத்துத் தேவைக்கு போதுமான மீன் உட்கொள்வதை உறுதிப்படுத்தல்.

4.3.4 மீன் தட்டுப்பாடான காலத்தில் சாதாரண விலையில் மீன் பெற்றுக்கொள்ளப்படுவதற்காக மீனை சேமித்து வைத்துக் கொள்ளவும்.

4.3.5 அனைத்துப் பெறுமதிச் சங்கிலி நிலைகளிலும் மூலத்தை கண்டறியக்கூடிய தன்மைகளையும் வெளிப்படைத்தன்மையையும் உறுதி செய்க.

**மீன்பிடித்ததற்கு பின்பான பெறுமதி இழப்பை இல்லாமல் செய்தல்**

**அரசாங்கம்:**

4.3.6 தரத்தை உறுதிப்படுத்துவதற்கு தேவையான உட்கட்டுமான வசதிகளை உற்பத்தி மற்றும் வழங்கல் சங்கிலிகளில் மேற்கொள்ளல்.

4.3.7 தரமான மீன் கையாடலை மேற்கொள்வதற்கு தேவையான அறிவூட்டல் நிகழ்வுகளை மேற்கொள்ளவும்.

**<u>ஏற்றுமதி அதிகரிப்பு</u>**

**அரசாங்கம்:**

4.3.8 ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட கடற்றொழில் மற்றும் நீரியல்வளர்ப்புத் திட்டங்கள் மீதான முதலீட்டை மேம்படுதல்.

4.3.9 சர்வதேச சந்தையில் அங்கீகரிக்கப்பட்ட உணவுப் பாதுகாப்பு மற்றும் உணவுத்தரம் கொண்ட மீன் உற்பத்தியை ஊக்குவிப்பதுடன் திறனான வழங்கல் சங்கிலி முகாமைத்தவத்தை உறுதிப்படுத்தவும்.

4.3.10 ஏற்றுமதிக்கான வாய்ப்பைக் கொண்ட புதிய, அதிகம் விருப்பப்படும் மீன் இனங்களின் இறக்குமதியையும் அவற்றின் வளர்ப்பையும் உறுதிப்படுத்தல்.

4.3.11 அழகுக்காக வளர்க்கப்படும் மீன் இனங்களினதும் மற்றும் அழகுக்காக வளர்க்கப்படும் நீர்த்தாவரங்களினதும் ஏற்றுமதியை ஊக்குவித்தல்.

4.3.12 சந்தையின் தேவைக்கேற்ப கடற்றொழில் மற்றும் நீரியல் வளர்ப்புப் பண்டங்கள் உற்பத்தியையும் பிற புதிய பண்டங்களின் கண்டுபிடிப்பையும் ஊக்குவித்தல்.

4.3.13 சர்வதேச சந்தையில் அதிக வருவாய் ஈட்டக்கூடிய சூழலுக்கு இசைவான அல்லது சேதன முறையில் உற்பத்தி செய்யப்பட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளர்ப்புத்துறையை ஊக்குவிக்கவும்.

4.3.14 இலங்கைக்கான உற்பத்திச்சின்னத்தைப் பெற்றுக்கொள்ள உதவவும்

4.3.15 ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட மீன்பிடிக்கல, பொழுது போக்கு கடற்கல மற்றும் பிற கடற்கலங்களின் உற்பத்தியை ஊக்குவித்தல்.

4.3.16 கண்டறியப்பட்ட அல்லது முதன்மைப்படுத்தப்பட்ட நாடுகளுடன் கடற்றொழில் மற்றும் நீரியல்வள உற்பத்திகள் உட்பட அனைத்து உற்பத்திகளும் சர்வதேச சந்தையினுள் நுழைவதை மேம்படுத்ததேவையான வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொள்ளவும்.

## 4.4 நீலப் பொருளாதாரம்.

நீலப் பொருளாதாரம் என்பது கடல் மற்றும் கரையோர சூழற்தொகுதியினை ஆரோக்கியமான நிலையில் பேணி கடல் வளங்களிலிருந்து பொருளாதார வளர்ச்சியை மேற்கொள்வதும் வாழ்வாதாரத்தையும் மற்றும் தொழில் வாய்ப்புக்களை மேம்படுத்துவதும் ஆகும். இன்றைய உலக நகர்வு நீலப் பொருளாதார கருதுகோளின் கீழ் புதிய பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகும். இப்புதிய பொருளாதார நடவடிக்கைகளை நோக்கி சில மீனவர்கள் நகர்வதால் மீன்பிடியில் தற்பொழுது இருக்கும் அழுத்தம் குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கருதுகோள் இன்னும் ஆரம்ப கட்டத்திலேயே இருப்பதால் இலங்கை இன்னும் இம்

முயற்சிகளில் பெருமெடுப்பில் ஈடுபடவில்லை. இலங்கை ஒரு தீவாக இருப்பதாலும் பெருமளவு கடல் வளங்களைக் கொண்டிருப்பதாலும் இலங்கை கடற்றொழிலைத் தவிர்ந்த மற்றய வளங்களில் இருந்து பயன்களை பெறுவதற்கான பொருத்தமான முயற்சிகளை முன்னெடுப்பதற்கான காலம் இதுவாகும். நீலப்பொருளாதாரத்தை வழிகாட்டும் பொருளாதாரக் கொள்கைகள் பின்வருமாறு.

**<u>நிலைபேறான வள முகாமைத்துவம்.</u>**

**அரசாங்கம்:**

4.4.1 உயிரியல் வளங்களை உபயோகித்து புதிய கடற்றொழிற்துறை முயற்சிகள் முன்னெடுப்பதை ஊக்குவித்தல்.

4.4.2 மருத்துவ மற்றும் வேறு பெறுமதிமிக்க திரவியங்களை கடல்வாழ் உயிரினங்களிலிருந்து பெற்றுக்கொள்வதை (Marine Bio- prospecting) ஒழுங்குபடுத்தல்.

4.4.3 ஆதிகூடிய திறனை பெற்றுக்கொள்வதற்கு கடல்சார் நடவடிக்கைகளின் ஒன்றிணைப்பை ஊக்குவித்தல்.

4.4.4 கடற்றொழில் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் பொழுது போக்கு மீன்பிடி நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

4.4.5 கடல்சார் சுற்றுலாத்துறையையும் பொழுது போக்குத் துறையையும் ஊக்குவித்தல்.

4.4.6 கடற்கல சிதைவுகளை மீன்களினது இருப்பை அதிகரிப்பதற்காக பேணுவதும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதும்.

4.4.7 மீன்பிடி இறங்குதுறைகளை முகாமைத்துவம் செய்வதற்கு ‘‘பச்சை இறங்குதுறை கருதுகோளை’’ பிரயோகித்தல்

4.4.8 கடற்கரையோர மற்றும் கடற்சூழலின் இருப்பை தொடர்ந்து பேணுவதற்கான நடவடிக்கைகளை மேம்படுத்தல்.

## 4.5 பிற துறைகள்

கடற்றொழில், நீரியல் வளர்ப்பு, உள்நாட்டு மீன்பிடி, நுகர்வோர், சந்தைப்படுத்தல், மற்றும் நீரியல் பொருளாதாரம் உள்ளடங்கலாக அனைத்துக் கடற்றொழில் மற்றும் நீர் வளர்ப்புத் துறைக்கான சகல விடயங்களையம் இப்பகுதி உள்ளடக்குகிறது. பொருத்தமான கொள்கைகள் பின்வருமாறு.

**<u>வேலைவாய்ப்பிற்கான முயற்சிகளை முன்னெடுத்தல்</u>**

**அரசாங்கம்:**

4.5.1 பொருத்தமான அனைத்துத் துறைகளிலும் வேலைவாய்ப்பிற்கான முயற்சிகளை முன்னெடுத்தல்.

4.5.2 மீனவப் பெண்களுக்கு சிறிய முதலீட்டிலான தொழில் முயற்சிகளை தொடங்குவதற்கு உதவி அளித்தல்.

4.5.3 பெண்களுக்கும் போதிய பொருளாதார வசதி அற்ற மக்களுக்கும் மேலதிக வருமானம் பெற்றுக் கொள்வதற்கு பயிற்சிகளையும் கட்டுமான வசதிகளையும் பெற்றுக்கொடுத்தல்.

4.5.4 ஒருங்கிணைந்த நிலைபேறான சுற்றுலாத்துறை உட்பட வியாபார நடவடிக்கைகளில் சமூகத்தின் பங்குபற்றலை ஊக்குவித்தல்.

4.5.5 தமது கிராம நீர்நிலைச் சூழலில் வருமானத்தை தரக்கூடிய நீரியல் வளர்ப்பு நடவடிக்கைகளை அல்லது வளர்ப்பு அடிப்படையிலான மீன்பிடி நடவடிக்கைகளை சமூகம் முன்னெடுப்பதற்கு ஊக்குவித்தல்.

4.5.6 பாடசாலையை விட்டு வெளியேறுபவர்கட்கு கடல்சார் தொழிற்துறையில் ஈடுபடுவதற்கு உயர்தர தொழிநுட்ப பயிற்சிகளையும் தொழில் வாய்ப்புக்களையும் தோற்றுவித்தல்.

4.5.7 வெளிநாட்டு வேலை வாய்ப்பை நோக்காகக் கொண்டு மாலுமிகளையும் (Skippers) கப்பற் தொழிலாளர்களையும் (Crew members) பயிற்றுவித்தல்.

4.5.8 நிலைபேறான வாழ்வாதாரங்களை கொடுக்கக்கூடிய வறுமை ஒழிப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தலை தொடர்தல்.

**<u>சூழல், காலநிலை மற்றும் இயற்கை அனர்த்தம்.</u>**

**அரசாங்கம்:**

4.5.9 சூழல், காலநிலை மாற்றத்திலான பிரச்சினைகளையும் மற்றும் இயற்கை அனர்த்தங்களிலான தாக்கங்களையும் எதிர் கொள்வதற்கு வழிமுறைகளை முன்னெடுத்தல்.

4.5.10 மீன் வளத்திலும் மற்றைய நீர்வாழ் உயிரினங்களிலும் கடல் மாசடைவதால் ஏற்படக்கூடிய நேரடியான பாதகமான தாக்கத்தை கருத்தில் கொண்டு கடல் மாசடைவதை தவிர்ப்பதற்கு பொருத்தமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

4.5.11 அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட சமூகங்களை மீள் குடியேற்றவும் வாழ்வாதார நடவடிக்கைகளை மீளத் தொடங்கவும் உதவி வழங்குதல்.

4.5.12 இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் தாக்கங்களிற்கு தீர்வு காணும் முகமாக பல்வேறு நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கமைந்த கட்டமைப்பு ஒன்றை உருவாக்குதல்.

4.5.13 காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய தாக்கத்தை எதிர்கொள்வதற்கு தேவையான தாங்குதிறன் கட்டமைப்பை மக்களுக்கு ஏற்படத்திக் கொடுத்தல்.

4.5.14 தகவல் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதும் நிறுவனங்களின் பங்குபற்றலை ஊக்குவித்தலும். காலநிலை மாற்றம் சம்பந்தமான பிரச்சினைகளை சேகரிப்பதற்கு தகவல் மையத்தை உருவாக்குதல்.

<u>பால் வேறுபாடு</u>

**அரசாங்கம்:**

4.5.15 இத்துறை நடவடிக்கைகளில் பெண்கள் பங்குபற்றுவதற்கான சம வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

4.5.16 சிறிய அளவிலான கடற்றொழில் அபிவிருத்தி வழிமுறைகளில் பால்வேறுபாடுகளை களைதலை அத்தியாவசியமாக்குதல்.

4.5.17 வளங்களை பயன்படுத்தலிலும் அதன் மூலம் நன்மைகளை பெறுவதிலும் ஆண் பெண் இருபாலாருக்கும் சமவாய்ப்புக்களை தோற்றுவித்தல்.

4.5.18 தங்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வை கண்டறிவதற்கு ஆண் பெண் இருபாலாரும் இணைந்து பங்குபற்றுதலை ஊக்குவித்தல்.

<u>**மீனவ சமூகத்தின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்தல்.**</u>

**அரசாங்கம்:**

4.5.19 மீனவ சமுதாயத்தில் காணப்படும் குடிப்பழக்கத்தை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

4.5.20 தமது பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகளால் பாதிப்புறும் மக்கள் போதிய நட்டஈட்டைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்ததல்

4.5.21 மீனவர்களுக்கும் பெண்கள் உட்பட மீன்பிடித் தொழிலாளர்களுக்கும் ஆன சமூக பாதுகாப்பு கட்டமைப்பை மேம்படுத்தல்.

4.5.22 பாரம்பரிய, இடம்பெயர் மீனவ சமூகத்திற்கு நிலம், நீர், மற்றும் மீன் வளங்களை உரிமைகளை உறுதிப்படுத்தல்.

4.5.23 வளங்களின் நிலைபேறான பாவனைக்கான பொறுப்பை உரிமையாளருக்கு அளித்தல்.

4.5.24 நிலம், உள்நாட்டு நீர்நிலைகளில் சுகாதாரமான, காத்திரமான பாதுகாப்பான வேலைத்தள வசதிகளை உறுதிப்படுத்தல்.

4.5.25 கடற்றொழில் முகாமைத்துவ நடவடிக்கைகளில் திட்டமிடல் மற்றும் ஆளுகையில் மீனவ சமுதாயத்தை உள்வாங்குதல்.

4.5.26 கடற்றொழில் முகாமைத்துவத்தில் மினவர்களின் பங்களிப்பை உறுதிப்படுத்துவதற்கு தேவையான கட்டமைப்பை மேம்படுத்துதல்.

4.5.27 மீனவ சமுதாயத்தின் மனித வள அபிவிருத்திகளின் அடிப்படையிலான ஆரோக்கியம், கல்வி, படிப்பறிவு, கணணி பாவனையை மேம்படுத்துவதற்கு முதலீடுகளை ஊக்குவித்தல்.

4.5.28 தேசிய, சர்வதேச மனித உரிமைத் தரங்கட்கு ஏற்ப வாழ்வை அமைத்துக் கொள்வதற்கு சிறிய அளவிலான மீன்பிடித் தொழிளாலர்கட்கும் மீனவ தொழிலாளர்கட்கும் தமது உரிமைகளை படிப்படியாக பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்தல்.

**மானியம்**

**அரசாங்கம்:**

4.5.29 மானியங்களை கடற்றொழில் முகாமைத்துவத்திற்கு மட்டுப்படுத்தல்.

4.5.30 மானியத்தில் தங்கிவாழும் மீனவ சமுதாயத்தின் மனப்பாங்கை அகற்றுதல்.

**நிதிப் பரிமாற்ற வசதிகள்.**

**அரசாங்கம்:**

4.5.31 நிதிப்பரிமாற்ற நடவடிக்கைகளில் மீனவர்களை உள்வாங்குவதற்கு நிதிப் பரிமாற்றுச் செயற்திட்டங்களை உருவாக்குவதற்கு தனியார் நிறுவனங்களை ஊக்குவித்தல்.

4.5.32 மீனவ சமுதாயம் தமது நிதித் தேவைகளை பூர்த்திசெய்வதற்கு வங்கிச் சேவைகளில் ஈடுபடவும் பாவனையிலுள்ள கடன் வசதிகளை பெற்றுக் கொள்ளவும் ஊக்குவித்தல்.

**தனியார் துறை பங்களிப்பு**

**அரசாங்கம்:**

4.5.33 இத்துறையில் தனியார் பங்குபற்றலை ஊக்குவித்தல்.

4.5.34 இத்துறையில் முதலீட்டை மேம்படுத்துவதற்கு அரச தனியார் இணைந்த பங்குபற்றலை ஊக்குவித்தல்.

**மனித உரிமை**

**அரசாங்கம்:**

4.5.35 கடற்றொழில் மற்றும் நீரியல் வளர்ப்பு அபிவிருத்தி முகாமைத்துவ நடவடிக்கைகளின் போது மனித உரிமை மீறல்கள் ஏற்படாமையை உறுதிப்படுத்தல்.

**ஊழல் ஒழிப்பு**

**அரசாங்கம்:-**

4.5.36 கடற்றொழில் நீரியல்வளர்ப்பு துறைகளில் ஊழல், பொருளாதார பொய்மை, தவறான மீன்பரிமாற்ற நடவடிக்கைகளை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**<u>மீனவர் நிறுவனங்கள்</u>**

**அரசாங்கம்:**

4.5.37 மீனவ சமூதாயத்தின் பிரச்சினைகளுக்கான தீர்விற்கான தீர்மானங்களை மேற்கொள்ளும் சபைகளில் மீனவர் கூட்டுறவுச் சங்ககங்களின் பங்குபற்றலை அங்கீகரித்து, அவற்றை பலப்படுத்தல்.

4.5.38 ஒருங்கிணைந்த கடற்கரையோர முகாமைத்துவத்தில் மீனவ கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைந்து செயற்படல்.

## 5. முடிவுரை

அரச பொருளாதார கொள்கை செயல் வரைபு “V 2025- வளர்ச்சியடைந்த ஒரு நாடு” இக் கொள்கை உருவாக்கத்திற்கு ஆதாரமாக அமைந்தது. இலங்கையின் பொருளாதார இலக்கான அதாவது இந்து சமுத்திரத்தின் அறிவியல் அடிப்படையிலான, சிறந்த போட்டித்தன்மையுடைய, சமூக சந்தைப் பொருளாதாரம் கொண்ட நிதி நிறைந்த ஒரு நாடாக 2025 ஆண்டில் மாற்றுவதற்கு இக் கொள்கை அமுலாக்கம் பங்களிக்கும்.

இத்துறையின் வளர்ச்சிக்கான அரசின் பங்களிப்பினை நிலைபேறுந்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அபிவிருத்தியின் நன்மைகளை சமமாக பங்கிடுவதனை உறுதிப்படுத்துவதற்கும் மட்டும் மட்டுப்படுத்தும். இத்துறையில் தனியார்துறை வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இருந்த போதிலும் இத்துறை கட்டுமான வசதிகளை மேற்கொள்ளும் போது பணமீள் வரவு குறைவாக இருப்பதால் தொடர்ந்தும் அரசு குறிப்பிட்ட சில நடவடிக்கைகளுக்கான முதலீட்டை தொடரும்.

இக் கொள்கைளின் அமுலாக்கம் கடற்றொழில் நீரியல் வளர்ப்பினை அனைத்து பங்குதாரர்களின் பங்களிப்புடன் பூரணமான செயன்முறைகளுடன் திறனான ஆளுகை மற்றும் முகாமைத்துவத்தை உறுதிசெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
இச் செயன்முறைகள் சூழற்தொகுதியின் ஆரோக்கிய இலக்கு மற்றும் மனித அபிவிருத்தி இலக்கு என்பவற்றை உறுதி செய்யும். இதன் விளைவாக கடற்றொழில் நீரியல் வளர்ப்பு அறிவியல் அடிப்படையிலான, நிலைபேறான, அனைத்து பங்குதாரர்கட்கும் நன்மைபயக்கக் கூடிய புதிய தொழிற்துறையாக மாற்றமடையும்.

# THE NATIONAL FISHERIES AND AQUACULTURE POLICY

## 1. INTRODUCTION

The increasing demand for fish and fishery products in the domestic and international markets has created promising opportunities for coastal nations to increase the share of the fisheries and aquaculture industry in their national economies. To achieve and sustain these opportunities, it is necessary to optimize the production from fisheries and aquaculture industry without over-exploiting their resource base. For development of fisheries and aquaculture in Sri Lanka, new investments need to be fostered. One of the basic requirements to build-up the confidence of local and foreign investors to invest in the sector, is to have a stable national fisheries policy in place that conforms to the general economic and social development policy of the Government. It is also necessary to ensure that the development and management of the sector conforms to the requirements stipulated in regional and international treaties on conservation and management of fisheries resources.

In this context, the Ministry of Fisheries and Aquatic Resources Development, in association with the departments and agencies under its purview has formulated the National Fisheries and Aquaculture Policy presented in this document, after a comprehensive consultation process. The Fisheries and Aquaculture Department of the Norwegian Ministry of Trade, Industry and Fisheries under a bilateral co-operation agreement has provided advisory services for development of the Policy.

## 2. THE FISHERIES AND AQUACULTURE SECTOR

Fishing has a long tradition in Sri Lanka that goes back to over two thousand years. It was one of the primary economic activities of the coastal communities. Marine fishing has gradually developed from a livelihood activity to a multibillion rupee industry over the years, particularly since Sri Lanka obtained Independence from the British rule in 1948. Inland fishing and aquaculture are recent developments not older than 75 years. Coastal aquaculture commenced in early 1980s with the establishment of shrimp farms in the North-western Province. Marine aquaculture commenced much later, i.e. around 2010.

The fisheries resource base of the country comprises the exclusive economic zone (EEZ) of 517,000 sq km, the territorial sea of 21,500 sq km, and internal waters that include lagoons and estuaries of 1580 sq km, and man-made reservoirs of 5200 sq km. The bays, lagoons, reservoirs and certain lands located in coastal and reservoir areas make the resource base for development of aquaculture.

The sector contributes around 1.4 % to the Gross Domestic Product (GDP) at current market prices. It provides direct and indirect employment to around 575,000 persons (3.7 % of the workforce of the country). The current annual fish production amounts to over 500,000 tons with

a value addition of over USD 1300 million. The sector also supports an export industry that exports about 5 % of the production comprising tuna, shrimp, lobster, crab, sea-cucumber ornamental fish, etc. and earning over USD 250 million. Fish is the main source of animal protein of the masses. Currently the local fish production supplies around 65 % of the total amount of fish required for the consumption in the country and the balance is imported. The Government intends to meet the total requirement from the local fisheries and aquaculture production or alternatively meet the cost of fish imports from part of the income of fish exports.

## 3. OBJECTIVES OF THE DEVELOPMENT OF THE SECTOR

The Government envisages achieving the following objectives from implementation of the new Policy in the fisheries and aquaculture sector.

1. Sustainable management of resources using science-based information
2. Compliance with regional and international obligations
3. Increased marine fisheries production
4. Increased aquaculture and inland fisheries production
5. Minimized post-harvest losses and increased value addition
6. Increased per capita consumption of fish
7. Increased export earnings
8. Improved opportunities for leisure, employment and enterprises development
9. Improved socio-economic conditions of the fisher community

## 4. POLICIES

The policies developed are presented under five areas, i.e. marine fisheries, aquaculture and inland fisheries, consumers and markets, blue economy, and other areas. Each policy will be implemented in accordance with a master plan that will be prepared with activities to be implemented and investments to be made for the period 2018 – 2025 for realization of the envisaged objectives.

### 4.1. Marine Fisheries

The current national fish production of Sri Lanka amounts to over 530,000 tons. Of this about 450,000 tons (85 %) comes from marine fisheries, which include fisheries conducted in the territorial sea and exclusive economic zone, and high seas. Fish production needs to be increased within sustainable levels. This needs implementation of measures such as controlled expansion of the fishing fleet and enhanced management of resources. Following are the policies applicable to marine fisheries.

<u>Sustainable Management of Resources</u>
The Government will:

4.1.1. Ensure sustainable management of the living marine resources based on the best available evidence from social, economic and ecological sciences.
4.1.2. Apply ecosystem and precautionary approaches to promote responsible fisheries management.
4.1.3. Enhance the stocks of endangered, threatened and protected species.
4.1.4. Enhance fish stocks in the territorial sea and the exclusive economic zone (EEZ) by ranching and habitat enhancement.
4.1.5. Prevent overcapacity of the fishing fleet.
4.1.6. Divert marine fishing efforts from over-exploited areas to unexploited or under-exploited areas.
4.1.7. Promote the use of fishing practices and equipment that cause comparatively low adverse impacts on the environment.
4.1.8. Maintain the ban of fishing in Sri Lanka waters by foreign fishing vessels except for research and development purposes.
4.1.9. Promote responsible fisheries in compliance with requirements stipulated in international treaties concerning management of fisheries.
4.1.10. Limit the new access to high seas fishing only to fishing vessels equipped with state-of-the-art technology for fish detection, on-board fish quality maintenance, etc.

Strengthening of Governance

The Government will:

4.1.11. Levy a royalty for exploitation of fish stocks in EEZ, and use the proceeds for management and development of fisheries.
4.1.12. Levy a fee for allocation of fish catch quotas to local fishing vessels fishing in high seas, and use the proceeds for management and development of fisheries.
4.1.13. Use management information systems for planning, management and reporting.
4.1.14. Strengthen the co-governance and management processes.
4.1.15. Apply temporal and spatial planning.
4.1.16. Develop human resources required.

Increasing of Fish Production

The Government will:

4.1.17. Strengthen the fisheries forecasting system for fishers to obtain information on locations for productive fishing.
4.1.18. Promote fishing for un-exploited or under-exploited fish stocks in EEZ.
4.1.19. Promote the use of locally produced bait including live bait in line fisheries.
4.1.20. Promote foreign fish landings in a responsible manner in accordance with the relevant international treaties.

Compliance with Regional and International Agreements

The Government will:

4.1.21. Participate actively in the regional and international fisheries management forums.
4.1.22. Comply with fisheries management measures stipulated in international treaties and by Regional Fisheries Management Organizations (RFMO)s.
4.1.23. Cooperate with other coastal states directly and through RFMOs for conservation and management of highly migratory and straddling fish stocks.

4.1.24. Cooperate with the Food and Agriculture Organization (FAO) in conservation and management of fisheries resources.
4.1.25. Comply with the requirements stipulated in international labour conventions and international maritime conventions in regard to maritime labour.
4.1.26. Provide port access and assistance as a port State in accordance with the international law to foreign fishing vessels in distress.

Infrastructure Facilities

The Government will:

4.1.27. Establish and operate the major fishery harbors through the Ceylon Fishery Harbours Corporation (CFHC).
4.1.28. Promote operation of fishery harbours under the “green fishery harbour” concept and as multi-purpose fishery harbours.
4.1.29. Promote the private sector to establish and operate other infrastructure facilities.
4.1.30. Develop anchorages and minor fish landing sites and hand over to fisher communities in the respective areas for operation and maintenance.

Fishing Vessels

The Government will:

4.1.31. Control the possible overcapacity of the fishing fleet.
4.1.32. Improve quality assurance of fishing vessels.

Safety at Sea and Occupational Safety

The Government will:

4.1.33. Ensure safe, healthy and fair working conditions at sea and on land in accordance with international standards.
4.1.34. Promote the establishment of insurance schemes concerning safety at sea and occupational safety.

## 4.2. Aquaculture and Inland Fisheries

Sri Lanka has a large extent of inland waters that include lagoons, estuaries, rivers, perennial and seasonal reservoirs, and *villus* (flood lakes), and therefore there is potential for further development of aquaculture and inland fisheries. Aquaculture and inland fisheries, which at present produces nearly 75,000 tons of fish annually provide a viable option for increasing the national fish production on a sustainable basis. Aquaculture requires land and water resources, which are used for human needs and many other development activities and therefore development of aquaculture may come into conflicts with other land-use patterns. Aquaculture may also result in adverse environmental impacts. Therefore, development of aquaculture needs prior spatial planning and environmental, socio-economic and cultural impact assessments. Policies guiding development of aquaculture and inland fisheries are the following.

Sustainable Management of Resources

The Government will:

4.2.1. Apply ecosystem approach to management of fisheries in inland waters.

4.2.2. Ensure conservation of aquatic biodiversity in inland waters.
4.2.3. Regulate the length and engine capacity of fishing vessel fishing in lagoons and estuaries.
4.2.4. Not allow the use of motorized boats for fishing in reservoirs.
4.2.5. Apply temporal and spatial planning in development of aquaculture.
4.2.6. Allocate land and water resources for aquaculture projects only after environmental, socio-economic and cultural impact assessments.
4.2.7. Ensure that aquaculture projects are implemented in strict compliance with conditions of approval.
4.2.8. Strengthen the aquaculture-animal healthcare activities.
4.2.9. Promote the use of best management practices (BMPs) in aquaculture.

Strengthening of Governance

The Government will:

4.2.10. Use management information systems for planning, development, management and reporting.
4.2.11. Strengthen the co-governance and management processes.
4.2.12. Develop human resources required for governance.
4.2.13. Utilize part of the earnings from fisheries in each inland waterbody for sustainable management of fisheries in the respective waterbody.

Increasing of Fish Production

The Government will:

4.2.14. Develop fisheries and aquaculture as appropriate in inland waters.
4.2.15. Promote fishing for under-exploited and unexploited fish resources in inland waters.
4.2.16. Expand and intensify aquaculture through environmentally friendly approaches.
4.2.17. Promote the culture of indigenous species, and new exotic species in compliance with the Food and Agriculture Organization (FAO) Code of Practice for the Introduction of Aquatic Species.
4.2.18. Genetically improve the performance of fish species used for aquaculture with the application of the precautionary principle.

## 4.3. Consumers and Markets

The basic objective of fisheries and aquaculture world over is to produce fish as human food. Fish not only provides animal protein but also healthy fatty acids, vitamins A and D, minerals and micronutrients such as calcium, iodine, iron, zinc and selenium. Good nutritional status leads to higher individual performance and mental acuity, which in turn supports macroeconomic and social growth. In addition to providing nutrition, fisheries and aquaculture play an important role in providing food security, as a provider of income and livelihood. According to FAO, food security exists when all people at all times, have physical and economic access to sufficient, safe and nutritious food to meet their dietary needs and food preferences for an active and healthy life. Fish, produced and distributed should be of a good food safety and quality standard with no or minimum post-harvest losses, and thus of a high economic value. Fish should be available in

all areas of the country at prices affordable to all income segments. Following are the policies guiding distribution, marketing and export of fish.

Food Security, Food Safety and Nutrition

The Government will:

4.3.1. Create employment with adequate income levels in the sector to ensure food security of more people.
4.3.2. Ensure quality and food safety of locally marketed fish and fishery products.
4.3.3. Promote consumption of sufficient fish for meeting nutritional requirements.
4.3.4. Stock fish as buffer stocks during gluts to ensure the availability of fish at reasonable prices during lean periods.
4.3.5. Ensure the traceability and transparency at all stages of the value chain process.

Elimination or Minimizing of Post-Harvest Losses

The Government will:

4.3.6. Improve quality infrastructure facilities in the production and supply chain.
4.3.7. Develop awareness on best fish handling practices.

Increasing of Exports

The Government will:

4.3.8. Promote investments in export-oriented fisheries and aquaculture projects.
4.3.9. Promote the production of fish and fishery products meeting the food safety and quality standards acceptable in the international market, and ensure an efficient supply chain management.
4.3.10. Promote the import and culture of new exotic species that have the potential for export.
4.3.11. Promote the production and export of live ornamental fish and aquatic ornamental plants.
4.3.12. Promote a market driven production of fisheries and aquaculture products including innovative products.
4.3.13. Promote the eco-friendly or organic production of fisheries and aquaculture products, which fetch comparatively higher prices in the international market.
4.3.14. Provide assistance for branding of Sri Lankan products.
4.3.15. Promote the construction of fishing vessels, recreational vessels and other vessels for export.
4.3.16. Work for trade agreements that will improve the access to all export products including fisheries and aquaculture products in identified or prioritized international markets.

## 4.4. Blue Economy

The "Blue Economy" is sustainable use of ocean resources for economic growth, improved livelihoods and jobs, while preserving the health of marine and coastal ecosystems. Under the concept of blue economy there is a global trend of undertaking marine associated new economic activities. These new economic activities apart from optimizing the benefits of marine resources, may reduce the pressure now being exerted on the fisheries resources, since some of the fishers may leave fishing for other economic activities. This concept still being in its infant stages and

Sri Lanka has not significantly ventured into it. However, in view of the vast potential and opportunities that exist for Sri Lanka as an island nation to benefit from the resources in the ocean, it is timely that Sri Lanka seeks exploiting the ocean resources other than fisheries in innovative ways. The following policies will guide the development of blue economy.

The Government will:

4.4.1. Promote the establishment of new marine industries utilizing living marine resources.
4.4.2. Regulate the access to marine bioprospecting with equitable sharing of benefits.
4.4.3. Promote integration of marine activities to ensure maximum efficiency,
4.4.4. Promote recreational fisheries without conflicting with mainstream fisheries.
4.4.5. Promote establishment of marinas and marine-based tourism activities.
4.4.6. Conserve ship wrecks for enhancement of fish stocks and promotion of tourism.
4.4.7. Apply the "green-harbour concept" in development and management of fishery harbours.
4.4.8. Promote conservation of the marine and coastal environment.

## 4.5. Other Areas

This section covers the topics applicable to the entire fisheries and aquaculture sector that includes marine fisheries, aquaculture and inland fisheries, consumers and markets, and blue economy. Following are the applicable policies.

<u>Generation of Employment Opportunities</u>

The Government will:

4.5.1. Work for generation of more employment opportunities in the sector where possible.
4.5.2. Assist women in the fisher communities to set up micro-business enterprises with special attention to widows.
4.5.3. Provide training and capacity building programs to assist women and marginalized groups to take up supplementary income generation activities.
4.5.4. Encourage communities to commence business activities including integrated sustainable tourism.
4.5.5. Motivate communities to commence aquaculture or culture-based fisheries as income activities in wetland areas associated with their villages.
4.5.6. Train school leavers in advanced technology related to fisheries, aquaculture and new marine industries targeting employment.
4.5.7. Train skippers and crew members for foreign employment.
4.5.8. Continue to implement the poverty alleviation programmes that provides sustainable livelihoods.

<u>Environment, Climate and Natural Disasters</u>

The Government will:

4.5.9. Develop a strategy to address the environmental and climatic-change challenges, and impacts of natural disasters.
4.5.10. Take possible precautions to prevent marine pollution given its direct adverse impacts on fish and other living marine aquatic resources.

4.5.11. Provide assistance to the communities affected by disasters to resettle and recommence livelihoods.
4.5.12. Formulate an inter-institutional network system of responsible authorities to address impacts of natural disasters.
4.5.13. Develop peoples' resilience capacity to cope with climatic change impacts.
4.5.14. Improve the research work and institutional involvement to fill the information gaps and develop a database on climate change related issues.

Gender

The Government will:

4.5.15. Promote equal opportunities for women's participation in the activities of the sector.
4.5.16. Make gender mainstreaming an integral part of small scale fisheries development strategies.
4.5.17. Create conditions for both men and women to have equal access to resources and benefits.
4.5.18. Encourage both men and women to participate jointly in fi n ding soljutions to their problems.

Improvement of the Socio-Economic Conditions of the Fisher Communities

The Government will:

4.5.19. Take measures to prevent alcoholism in fishing communities.
4.5.20. Ensure that adequate compensation is provided to fisher communities who will be affected by development activities in the respective areas.
4.5.21. Improve the social safety net and social security protection for the fishers and fish workers including women.
4.5.22. Respect the tenure rights of the traditional, migrant, subsistence and artisanal fishing communities to land, waters and fish resources.
4.5.23. Make right holders responsible for sustainable use of the resources.
4.5.24. Ensure safe, healthy and fair working conditions at sea, inland waters and on land.
4.5.25. Involve fishing communities in designing, planning and implementation of fisheries management measures.
4.5.26. Build the capacity of fishers and ensure their effective participation in fisheries management.
4.5.27. Promote investment in human resource development such as health, education, literacy and digital inclusion in fishing communities.
4.5.28. Progressively realize rights of the small scale fishers and fishworkers to an adequate standard of living in accordance with the national and international human right standards.

Subsidies

The Government will:

4.5.29. Use subsidies only as a tool in management of the sector.
4.5.30. Wean away the fishers from the mentality of dependency on subsidies.

Financing Facilities

The Government will:

4.5.31. Encourage private financial institutions to develop financial instruments to ensure financial inclusion for fishers.

4.5.32. Encourage fisher communities to deal with banks and other formal credit institutions for their financial requirements.

Private Sector Participation

The Government will:

4.5.33. Promote the private sector participation in the sector.

4.5.34. Promote the establishment of public – private partnerships (PPPs) for investment in the sector.

Human Rights

The Government will:

4.5.35. Ensure that no human rights are violated in development and management of fisheries and aquaculture.

Anti-Corruption

The Government will:

4.5.36. Work for prevention of corruption and economic fraud including fish-laundering in the fisheries and aquaculture sector.

Fisher Organizations

The Government will:

4.5.37. Recognize, empower and strengthen fisheries cooperatives in addressing issues in fisheries and fisher wellbeing, and in representing fishing communities at decision making platforms.

4.5.38. Liaise with fisheries cooperatives in integrated coastal zone management.

## 5. CONCLUSION

This Policy was formulated taking guidance from the Government economic policy framework document, “V2025 A Country Enriched”. Implementation of the Policy is expected to contribute to achievement of the Government’s economic vision, i.e., to make Sri Lanka a rich country by 2025 by transforming the country into the hub of the Indian Ocean with a knowledge-based, highly competitive, social-market economy.

The Government’s role in the development of the sector is basically confined to management with the objective of ensuring the sustainability and equitable distribution of the benefits of the development. The private sector is expected to undertake commercial activities in the sector. However, the Government will continue to invest in certain areas such as development of infrastructure facilities, in which the private sector is perhaps reluctant to invest owing to their long payback periods.

Implementation of the Policy is expected to ensure sustainability of the fisheries and aquaculture industry, through effective governance and management mechanisms with the participation of all

stakeholders through a participatory and holistic process. Such a process will ensure the achievement of both ecosystem health goals and human development goals. The outcome will be a transformation of the fisheries and aquaculture industry to a knowledge-based, sustainable and modern industry that benefits all stakeholders.